Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MAY 27 2025

செவ்வாய்க்கிழமை 27, மே 2025 | ஒளி: 10 கதிர் 247 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

## இரண்டு மாத சிசு திடீர் மரணம்

சளி மற்றும் இருமல் காரணமாக சிகிச்சை பெற்று வந்த துன்னாலை மேற்கு, கரவெட்டியைச் சேர்ந்த இரண்டு மாதங்களேயான ஆண் சிசுவான எட்வேட் தனுசன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சளி மற்றும் இருமல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வியாழக்கிழமை (22) அன்று அனுமதிக்கப்பட்டு, யாழ்ப்பாண

தொடர்ச்சி P2

## ஓமந்தை விபத்தில் ஒருவர் பலி; மூவர் படுகாயம்



க.அகரன்

யாழ்ப்பாணம், ஏ-9 வீதியில் வவுனியாவின் ஓமந்த பகுதியில் திங்கட்கிழமை (26) காலை கார் ஒன்று டிப்பர் லொறியுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஓமந்த பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரும் அவரது குடும்பத்தினரும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது,



அவர்களின் காருக்கு முன்னால் வந்த டிப்பர் லொறியுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்தில் காரை ஓட்டி வந்த விரிவுரையாளரின் கணவர் உயிரிழந்ததாகவும்,

தொடர்ச்சி P2

## போலந்து அமைச்சர் இலங்கைக்கு விஜயம்

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு போலந்து குடியரசின் வெளிவிவகார அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் 11 பேர் கொண்ட உயர்மட்ட குழு நாளை புதன்கிழமை (28) இலங்கை வருகிறது.



இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய ஆகியோரை மரியாதை நிமித்தமாக சந்தித்து,


தொடர்ச்சி P2

## முன்பு நடந்த சம்பவங்களை மீண்டும் மீண்டும் ஏற்றினால் சிக்கல்

### பொலிஸார் எச்சரிக்கை

இலங்கையர் ஒருவரால் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணியைத் தாக்கிய சம்பவம் தொடர்பான காணொளி தற்போது சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது. இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவு, திங்கட்கிழமை (26) ஊடக அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளது.

இச்சம்பவமானது கடந்த 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெலிகம பொலிஸ் பிரதேசத்தில் நடந்துள்ளதுடன், பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி ஒருவர் இந் நாட்டுக்கு வருகை தந்த போது இலங்கையர் ஒருவரால் தாக்குதல்




தொடர்ச்சி P2





## மாலினியின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்

'இலங்கை சினிமாவின் ராணி' என்று அழைக்கப்படும் மறைந்த நடிகை மாலினி பொன்சேகாவின் இறுதி சடங்கு, சுதந்திர சதுக்கத்தில் அரச மரியாதையுடன், திங்கட்கிழமை (26) மாலை நடைபெற்று, பூதவுடல் அக்கினியுடன் சங்கமமாகியது.

மாலினி பொன்சேகா சனிக்கிழமை(24) அன்று காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 78 ஆகும்.

மாலினி பொன்சேகாவின் பூதவுடல் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தரங்கனி மண்டபத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த போது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் தங்களுடைய இறுதி அஞ்சலி செலுத்தினர். திரைப்பட பிரபலங்கள் உட்பட பலரும் அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

படம் : நிஷால் பதுகே

### தேசிய வைத்தியசாலையில்

## பணிப்பாளர் வெற்றிடம்

இலங்கையின் மிகப்பெரிய வைத்தியசாலையான கொழும்பு தேசிய வைத்தியசாலை, பணிப்பாளர் இல்லாமல் கடந்த இரண்டு மாதங்களாக இயங்கி வருவதாக வைத்தியசாலை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2




### "தீங்கு விளைவித்தால்

## கடும் சட்ட நடவடிக்கை"



இலங்கையின் சுற்றுலாத் துறையை குறிவைத்து பல்வேறு போலி செய்திகள் மூலம் அரசாங்கத்தை நாசப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மஹிந்தானந்தவுக்கு நிபந்தனை பிணை



அரசாங்கத்துக்கு 130 கோடி ரூபாய், நஷ்டம் ஏற்படுத்தியதாகக் கூறி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவை பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், திங்கட்கிழமை (26) உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2

## "மறு அறிவித்தல் வரை கடல் பயணங்களை தவிர்க்கவும்"

மறு அறிவித்தல் வரை சில கடல் பிராந்தியங்களுக்கு பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

சிலாபத்திலிருந்து புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையிலும் மாத்தறை முதல்

தொடர்ச்சி P2

## 31,145 வளாகங்கள் இனப்பெருக்க தளங்கள்

நுளம்பு பெருகும் இடங்களைக் கொண்ட 31,145 வளாகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் ஊடக அமைச்சகம் தெரிவித்துள்ளது. கொசுப் புழுக்கள் உள்ள 6,077 வளாகங்கள் அடையாளம் காணப்பட்டதாகவும்,

தொடர்ச்சி P2

## ஊடக சந்திப்பை புறக்கணித்து டெலோ முக்கியஸ்தர் வெளியேறினார்

### முடிவுகளில் மாற்றம் வரலாம் என்றும் தெரிவிப்பு



க.அகரன்

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் உயர்மட்ட குழுக் கூட்டம் வவுனியாவில், ஞாயிற்றுக்கிழமை (25) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## சட்டத்தரணிகளுக்கு விசேட அறிவுறுத்தல்

சட்டத்தரணிகள் தங்களின் தொழில்முறை கடமைகளை எந்தவித அச்சமோ அல்லது தடையோ இல்லாமல் நிறைவேற்ற முடியும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) தெரிவித்துள்ளது.

சட்ட அமுலாக்க முகவர் மற்றும் வழக்குத் தொடுக்கும் அதிகாரிகள், சட்டத்தரணிகள் வசம் உள்ள தகவல்களை அணுக முயன்ற பல நிகழ்வுகள் உள்ளன என்று ஊடக அறிக்கை ஒன்றில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதிக்கும் சர்வதேச லயன்ஸ் கழகத் தலைவருக்கும் இடையில் சந்திப்பு

இலங்கையிலுள்ள சிறுவர் மற்றும் இளைஞர் சமூகத்தினரின் உள ஆரோக்கியம் மற்றும் சமூக நலன்களுக்கு, சர்வதேச லயன்ஸ் கழகம் ஆதரவு வழங்கும் என சர்வதேச லயன்ஸ் கழகத்தின் தலைவர் பெப்ரிசியோ ஒலிவேரா (Fabrcio Oliveira) தெரிவித்தார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் திங்கட்கிழமை (26) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பெப்ரிசியோ ஒலிவேரா (Fabr-cio Oliveira) இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் தற்போது இலங்கையில் முன்னெடுக்கப்படும் உணவுப் பாதுகாப்புத் திட்டங்கள், பல்வேறு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செயல்படுத்தப்படும் நிவாரணத் திட்டங்கள் மற்றும் கல்வித் திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதாகத் தலைவர், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் உறுதியளித்தார்.

சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை ஜனாதிபதி பாராட்டியதோடு, அவற்றுக்குத் தனது நன்றியையும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# சட்டத்தரணிகளுக்கு விசேட அறிவுறுத்தல்

தங்கள் வாடிக்கையாளர்களின் சட்டப்பூர்வ அறிவுறுத்தல்களின்படி, செயல்படும் சட்ட பயிற்சியாளர்கள் ரகசியத்தன்மையின் தொழில்முறை கடமைகளால் பிணைக்கப்பட்டுள்ளனர் என்றும், உச்ச நீதிமன்ற விதிகள் மற்றும் சாட்சியக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கடமைகள் உறுதியாக நிறுவப்பட்டுள்ளன என்றும் லங்கை சட்டத்தரணிகள் சங்கம் கூறியது.

இது வாடிக்கையாளர்களின் ஒப்புதலுடன் அல்லது சட்டத்தால் வெளிப்படையாகத் தேவைப்படுவதைத் தவிர சலுகை பெற்ற தகவல்தொடர்புகளை வெளியிடுவதைத் தடை செய்கிறது.

இது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“சமீப காலங்களில், சட்ட அமலாக்க முகவர்களும் சட்டத்தரணிகளும் சட்டத்தரணிகளின் வசம் உள்ள தகவல்களை அணுக முயன்ற பல நிகழ்வுகளின் அறிக்கைகளை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பெற்றுள்ளது.

சட்ட பயிற்சியாளர்கள் தங்கள் வாடிக்கையாளர்களின் சட்டப்பூர்வமான அறிவுறுத்தல்களின்படி செயல்படுகிறார்கள் மற்றும் இரகசியத்தன்மையின் தொழில்முறை கடமைகளுக்குக் கட்டுப்படுகிறார்கள்.

இந்தக் கடமைகள் உயர்நீதிமன்ற விதிகள் மற்றும் சாட்சியக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உறுதியாக நிறுவப்பட்டுள்ளன.

இது வாடிக்கையாளர்களின் சம்மதத்துடன் அல்லது சட்டத்தால் வெளிப்படையாகத் தேவைப்படுவதைத் தவிர சலுகை பெற்ற தகவல்தொடர்புகளை வெளியிடுவதைத் தடை செய்கிறது.

சட்ட அமுலாக்க முகவர்களும் சட்டத்தரணிகளும் தங்கள் தொழில்முறை கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக எழும் விடயங்கள் குறித்து அறிக்கைகளை வெளியிட சட்டத்தரணிகளை அழைப்பது பொருத்தமற்றது.

இத்தகைய நடவடிக்கைகள் நெறிமுறை தரங்களை மீறுவதற்கும் சட்டத் தொழிலின் சுதந்திரத்திற்கு ஆபத்தை விளைவிக்கும்.

நீதி நிர்வாக அமைப்பில் சட்டத்தரணிகளின் பங்கைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் இத்தகைய செயல்களில் இருந்து விலகுமாறு அத்தகைய அனைத்து அதிகாரிகளையும் நிறுவனங்களையும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்துகிறது.

இந்த வகையான தலையீடு சட்டத்தின் ஆட்சி மற்றும் அரசியலமைப்பின் பிரிவு 14(1)(g) இன் கீழ் அனைத்து குடிமக்களுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு பாதுகாப்புகளை அச்சுறுத்துகிறது, இதில் சட்டத்திரணிகளும் அடங்குவர்.

சட்டப்பூர்வ சகோதரத்துவத்தின் உறுப்பினர்கள் உயர்நீதிமன்ற விதிகள் உட்பட சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு எந்த பயமும் அல்லது வரம்பும் இல்லாமல் தங்கள் தொழில்முறை கடமைகளை நிறைவேற்ற முடியும் என்பதை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மீண்டும் வலியுறுத்துகிறது.

இது நீதி வழங்கலில் ஒரு சுதந்திரமான மற்றும் நியாயமான அமைப்பைப் பராமரிக்க ஒரு அத்தியாவசிய அங்கமாகும்.

சட்டத்தரணிர்கள் ஒரு வாடிக்கையாளருக்கு தங்கள் தொழில்முறை கடமைகளைச் செய்வதற்கு விதிக்கப்படும் எந்தவொரு வரம்பும், குடிமக்கள் நீதியை முறையாக அணுகுவதற்கான உரிமையைக் குறைக்கும், அத்துடன், இது நாட்டின் நீதி அமைப்பில் இன்றியமையாத ஒரு அங்கமாகும்.

சட்ட வல்லுநர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்கும், இலங்கையில் சட்டத் தொழிலின் தொடர்ச்சியான சுதந்திரம், ஒருமைப்பாடு மற்றும் கண்ணியத்தை நிலைநிறுத்துவதற்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உறுதியாக உள்ளது.

# ஊடக சந்திப்பை புறக்கணித்து டெலோ முக்கியஸ்தர் வெளியேறினார்

இதில், டொலோவின் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கருணாகரன் பங்கேற்றார். எனினும், சந்திப்பின் நிறைவில் நடத்தப்பட்ட ஊடகச் சந்திப்பில் கலந்துகொள்ள அவர் மறுப்பு தெரிவித்து, வெளியேறியுள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் உயர்மட்ட குழுக் கூட்டம் வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது. இதன்போது உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பிலும் தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு ஆதரவளிப்பது தொடர்பிலும் சுமார் 3 மணி நேரக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இதன் பின்னர் ஊடக சந்திப்பு இடம் பெற்று இருந்தது. இதன்போது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட பொழுதிலும் டெலோவின் சார்பில் செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொள்ளவில்லை. ஆகையால், கருணாகரனை குறித்த ஊடக சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு கூறப்பட்டிருந்தது.

எனினும், அவர் மறுப்பு தெரிவித்து இருந்தார். ஊடக சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு புளொட் தலைவர் த. சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரால் தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்ட போதிலும், இன்று (25) எடுக்கப்பட்ட முடிவுகளில் சில மாற்றங்கள் நிகழக் கூடும் எனவும் ஆகவேதான், இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொள்ள முடியாது எனவும் கூட்ட மேசையிலிருந்து எழுந்து சென்றிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக இன்றைய (25) கூட்ட முடிவுகள் சில வேளைகளில் மாற்றங்களை ஏற்படுத்துமா? என்கின்ற ஐயப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (25) அன்று நடைபெற்ற கூட்டத்தில் புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ஈ. பி.ஆர்.எல்.எப். தலைவர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன், டெலோ சார்பில் கருணாகரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் சார்பில் செயலாளர் க.துளசி, சமத்துவ சார்பில் மு.சந்திரகுமார், உட்பட உயர்மட்ட பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் மீண்டும் ஏற்றினால் சிக்கல்

நடத்தப்பட்டுள்ளதாக 14.02.2024 ஆம் திகதியன்று வெலிகம நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, இச் சுற்றுலாப் பயணி இந் நாட்டுக்கு வருகை தந்ததுடன், அவருடைய கேமராவில் தனது நடவடிக்கைகளை ஒளிப்பதிவு செய்து கொண்டு வெலிகம பிரதேசத்திற்குச் சென்றதாகவும், அதன் போது வெலிகம பெலேன கடற்கரையிலுள்ள நீர் சறுக்கு பயிற்சி நிலையத்திற்குச் சென்று காட்சிகளை ஒளிப்பதிவு செய்த போது, அந்த நிலையத்தின் ஊழியர் ஒருவர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், அதனால் ஏற்பட்ட தகராறு காரணமாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணியை அந் நபர் தாக்கியுள்ளதாக அறியமுடிந்தது.

அதற்கமைய சம்பவ தினத்தன்று தாக்குதல் தொடர்பாக வெலிகம, பெலேன பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடைய நபர் ஒருவர் வெலிகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மாத்தறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதுடன், 11.09.2025ஆம் திகதி இவ் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தினால் மீண்டும் அழைப்பானை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சில சந்தர்ப்பங்களில் பல்வேறு நபர்களால் மேற்கொள்ளப்படும் தாக்குதல் உட்பட அவர்களால் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பொலிஸ் நிலையங்களுக்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் அல்லது சமூக வலைத்தளங்கள் ஊடாக பகிரப்படும் ஒளிப்பதிவுகள் தொடர்பாக இலங்கை பொலிஸாரினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு சந்தேக நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இருப்பினும், தற்போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட சம்பவம் என்பதுடன், சமீப காலத்தில் அல்லது சில தினங்களுக்கு முன்பு நடந்த சம்பவமாகச் சித்தரிக்கப்பட்டு சில நபர்களால் சமூக வலைத்தளங்கள் ஊடாக பதிவிறக்கம் செய்யப்படுவதாக அவதானிக்க முடிகின்றது.

அதனால் முன்பு நடந்த சம்பவங்களை மீண்டும் மீண்டும் சமூக வலைத்தளங்களில் பதிவிறக்கம் செய்யப்படும் நபர்கள் அல்லது ஒரு குழுக்களினால் நாட்டுக்கு அவமானத்தை ஏற்படுத்துவது அல்லது வேறு நோக்கத்துடன் செயல்படுகின்றனரா என்பது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவ்வாறு செயல்படும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

# கடும் சட்ட நடவடிக்கை

ஊடகங்களுக்கு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், வெலிகம மற்றும் அருகம்பை பகுதிகள் சம்பந்தப்பட்ட இரண்டு குறிப்பிட்ட சம்பவங்கள் மூலம் இது தெளிவாகிறது.

அதில் முதல் நிகழ்வு வெலிகமாவில் பிலிப்பைன்ஸ் நாட்டவர் ஒருவர் தாக்கப்பட்ட வீடியோ. இது 2024இல் நடந்த ஒரு சம்பவம் என்று விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. இரண்டாவதாக, அருகம்பை பகுதியில் பொது இடங்களில் சுற்றுலாப் பயணிகள் பிகினி அணிவதைத் தவிர்க்குமாறு ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது அப்பகுதியில் இன பதற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பு நகராட்சி மன்றம் உட்பட முக்கிய உள்ளூராட்சி மன்றங்களில் கட்டுப்பாட்டை ஏற்படுத்த அரசாங்கம் முஸ்லிம் சமூகத்துடன் இணைந்து பணியாற்றி வரும் நேரத்தில் அருகம்பை குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நாங்கள் அருகம்பேயில் உள்ள முஸ்லிம் சமூகத்தினரிடம் விசாரித்தோம். பொது இடத்தில் நிர்வாணமாக நடந்து செல்லும் ஒரு சம்பவத்தை அவர்கள் தெரிவித்தனர்.

அதை அவர்கள் எதிர்த்தனர். அரசாங்கம் தனது அதிகாரத்தை வலுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதால், இந்தப் பகுதியில் பிரச்சினைகளை ஏற்படுத்த சிலர் அல்லது குழுவினரால் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு சம்பவமாக இது இருக்கலாம் என்றும் நாங்கள் சந்தேகிக்கிறோம்.

இனப் பதட்டங்களை ஏற்படுத்தவும், தேசத்தை மேம்படுத்துவதற்கான அதன் முயற்சிகளை நாசப்படுத்தவும் சிலர் மேற்கொண்ட முயற்சிகளாக இந்த சம்பவங்களை அரசாங்கம் கருதுகின்றது.

சுற்றுலாத் துறையை குறிவைத்து பொருளாதாரத்திற்கு தீங்கு விளைவிக்க முயற்சிக்கும் எந்தவொரு நபரோ அல்லது குழுவோ மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சுற்றுலாத் துறையின் துணை அமைச்சர் மேலும் இதுபோன்ற போலிச் செய்திகளுக்கு பலியாக வேண்டாம் என்று பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

# 31,145 வளாகங்கள் இனப்பெருக்க தளங்கள்

3916 சிவப்பு அறிவிப்புகள் வெளியிடப்பட்டதாகவும், 1470 வளாகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அமைச்சகம் கூறுகிறது. தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருவதால், வரும் காலங்களில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் அபாயம் இருப்பதால், சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸவின் அறிவுறுத்தலின் பேரில் செயல்படுத்தப்பட்ட நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில், ஒரு வார சிறப்பு நுளம்பு கட்டுப்பாட்டு திட்டத்தை அவசரமாக செயல்படுத்த மேற்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டம் 15 மாவட்டங்களில் 95 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டது.

# பணிப்பாளர் வெற்றிடம்

முன்னாள் பணிப்பாளர், சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளராக பதவி உயர்வு பெற்று சென்றுவிட்டார். இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு பதில் பணிப்பாளர் நியமிக்கப்பட்டார்.

நிரந்தர பணிப்பாளர் இல்லாததால் வைத்தியசாலையில் சில பிரிவுகளில் பிரச்சினைகள் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சுமார் 1,500 மருத்துவர்கள் மற்றும் 200 நிபுணர்கள் பணிபுரிவதாகவும், மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 25,000 என்றும் கூறப்படுகிறது.

# இரண்டு மாத சிசு திடீர் மரணம்

போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக சனிக்கிழமை (24) மாற்றப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி சிசு உயிரிழந்துள்ளது.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை நெல்லியடி பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# போலந்து அமைச்சர் இலங்கைக்கு விஜயம்

கலந்துரையாடல்களில் இந்த உயர்மட்ட குழு ஈடுப்படவுள்ளது.

அத்துடன், இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான நீண்டகால ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹெராத்துடன் கலந்துரையாடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# ஓமந்தை விபத்தில் ஒருவர் பலி; மூவர் படுகாயம்

அவரது மகனும் மற்றொரு உறவினரும் படுகாயமடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் நெல்லியடியைச் சேர்ந்த 52 வயதான சஞ்சங்காட் குருக்கள் பிரபாகரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் கலாச்சார அதிகாரியாகப் பணியாற்றி வந்தார்.

அவரின் மனைவி பி.சீத்தாலட்சுமி (வயது-50), மகன் பி.அக்ஸய் (வயது-27), மாமனார் சுவாமிநாதன் ஐயர் (வயது-70) படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா, ஓமந்தை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# மஹிந்தானந்தவுக்கு நிபந்தனை பிணை

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நோய்க்கிரும பாக்டீரியாக்களைக் கொண்ட கரிம உரக் கப்பலுக்கு தாவர தனிமைப்படுத்தல் சுற்றுச்சூழல் தர அறிக்கையைப் பெறுவதற்கு பத்து நாட்களுக்கு முன்னர் கடன் கடிதங்களை வழங்க கட்டாயப்படுத்தியதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தினார் என மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

சந்தேக நபருக்கு ஐம்பதாயிரம் ரூபாய் ரொக்கப் பிணையையும் தலா ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான ஐந்து சரீரப் பிணைகளிலும் விடுவித்த கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி, சந்தேக நபரின் வெளிநாட்டுப் பயணத்தைத் தடை செய்யவும் உத்தரவிட்டார்.

இரண்டு பிணையாளர்கள் நெருங்கிய உறவினர்களாக இருக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது.

இலஞ்சம் மற்றும் ஊழல் சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு தீர்மானிக்கும் ஒரு திகதியில் ஆணைக்குழுவுக்குச் சென்று வாக்குமூலம் அளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இலஞ்சம் மற்றும் ஊழல் சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில், தலைமை நீதவான் தனுஜா லக்மாலி அவருக்கு மே 16 அன்று, பிடியாணை பிறப்பித்தார். அதனையடுத்து, மஹிந்தானந்த அளுத்கமகே மே 20 அன்று நீதிமன்றத்தில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# “மறு அறிவித்தல் வரை கடல் பயணங்களை தவிர்க்கவும்”

ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோர பகுதிகள் கொந்தளிப்பாகக் காணப்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த கடல் பிராந்தியங்களில் அவ்வப்போது காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 60 கிலோ மீட்டர் முதல் 70 கிலோ மீட்டர் வரை அதிகரித்துக் காணப்படலாம் என திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், நாட்டின் ஏனைய கடல் பிராந்தியங்களிலும் காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடும் எனவும் பல்வேறு பகுதிகளிலும் 75 மில்லி மீட்டர் வரையான பலத்த மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் நுவரெலியா, கண்டி, காலி, மாத்தறை மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழைபெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதிக்கும் சர்வதேச லயன்ஸ் கழகத் தலைவருக்கும் இடையில் சந்திப்பு

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே மற்றும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் பிரதிநிதிகள் குழு ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## காணொளி விவகாரம்;

# சார்ஜன்ட் பணி இடைநீக்கம்

சமூக வலைத்தளங்களில் பரவி வரும், பிரஜை ஒருவரைத் தாக்கும் காணொளி தொடர்பாக பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் அதிகாரியொருவர் மற்றும் ஒரு நபருக்கிடையில் சனிக்கிழமை (24) அன்று ஏற்பட்ட வாக்குவாதத்திற்கு பிறகு பொலிஸ் அதிகாரியால் குறித்த நபர் தாக்கப்பட்ட காணொளி தற்போது சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

கொக்கரெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இப்பாகமுவ - மடகல்லே வீதியில் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்ற ஆண் மற்றும் பெண் ஒருவரைச் சோதனையிடச் சென்றபோது, ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து, இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கொக்கரெல்ல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குருநாகல் மாவட்டபொலிஸ் அதிகாரி மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் பலி

எச்.எம்.எம்.பர்ஸான்

மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் மரணமடைந்துள்ள சம்பவம் வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிச்சங்கேணி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (25) இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மூன்று மோட்டார் சைக்கிளில் ஆறு நண்பர்கள் கிண்ணியாவுக்கு சென்று ஓட்டமாவடி பகுதியை நோக்கி வந்து கொண்டிருந்த போது விபத்தில் சிக்கி இருவர் மரணமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பனிச்சங்கேணி பாலத்தில் மோதியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதில், ஓட்டமாவடி - பதுரியா நகர் ஆலையடி வீதியைச் சேர்ந்த முகம்மது உசனார் அப்துல் சாஜித், ஓட்டமாவடி - சூடுபத்தினசேனை பகுதியைச் சேர்ந்த முகம்மது அஸ்மி முகம்மது அஸாம் எனும் 19 வயதுகளுடைய இரு இளைஞர்களே மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்த இளைஞர்களின் ஜனாஸாக்கள் வாகரை வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின்னர் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக நள்ளிரவு 2 மணி அளவில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## புதிய உபவேந்தரானார் எஸ்.எம்.ஜுனைதீன்



எஸ்.அஷ்ரப்கான்

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தராக மருதமுனையை சேர்ந்த பேராசிரியர் கலாநிதி எஸ்.எம்.ஜுனைதீன் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டார்.

அவர் திங்கட்கிழமை (26) அன்று தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

## டயர் ஏறியதில் ஒருவர் பலி

எஸ்.கௌசல்யா



கொத்மலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெதமுல்ல பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (26) இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் 33 வயதான ஒரு பிள்ளையின் தந்தை உயிரிழந்துள்ளார்.

வெதமுல்லையில் இருந்து கெமிலிதன் பிரதேசத்திற்கு மரக்கறி ஏற்றுவதற்காகப் பயணித்த லொறியை வழியில் நிறுத்தி விட்டு இறங்கிய லொறியின் சாரதி, லொறி டயருக்கு கல் ஒன்றை வைக்க முற்பட்ட போது குறித்த லொறி தானாக நகர்ந்து சாரதி மீது ஏறிச் சென்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து, லொறி சாரதியைப் பிரதேச மக்கள் உடனடியாக மீட்டு அருகில் உள்ள தோட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்று மேலதிக சிகிச்சைகளுக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இருப்பினும் சிகிச்சைக்காகக் கொண்டு சென்ற சாரதி உயிரிழந்ததாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்,

தற்போது சடலம் பிரேதப் பரிசோதனைகளுக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை கொத்மலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 'கோர்ட் சூட்' வியாபாரி

ஏ.எச்.ஹஸ்பர்

திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக அரச நியமனம் கோரி பட்டதாரி ஒருவர் மாம்பழ வியாபாரி போன்று, 'கோர்ட் சூட்' அணிந்து தனது பட்டத்தைக் கையில் எடுத்துகொண்டு திங்கட்கிழமை (26) அன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

கிண்ணியாவை சேர்ந்த குறித்த பட்டதாரி "அரச துறையில் நியமனம் வழங்குங்கள், கலைப் பட்டத்தை இல்லாமல் ஆக்குங்கள்..."உள்ளிட்ட விடயங்களை இதன்போது தெரிவித்தார்.



## தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டமூலம் மீதான விவாதம்

தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டமூலம் மீதான விவாதத்தை ஜூன் 3ஆம் திகதி காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை நடத்த, கடந்த வாரம் கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட விதிமுறைகள் குறித்த விவாதம் ஜூன் 4 புதன்கிழமை சபையில் நடைபெறும், அதே நேரத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்த) சட்டமூலம் ஜூன் 5 அன்று விவாதிக்கப்படும்.

இதேவேளை, மறைந்த ஆர்.சம்பந்தன், மாவை சேனாதிராஜா மற்றும் ஜே.ஆர்.பி.சூரியப்பெரும ஆகியோருக்கான இரங்கல் ஜூன் 5 வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

## வர்த்தகர் மீது துப்பாக்கிச்சூடு: மூன்று பேர் கைது

கொட்டாஞ்சேனை - புளுமெண்டல் ரயில்வேக்கு அருகில் புறாக்களை விற்பனைச் செய்யும் கடை நடத்தி வரும் 38 வயதான நபரொருவர் மீது ஞாயிற்றுக்கிழமை (18) மாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில், மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மூவரில், ஒருவர் துப்பாக்கித்தாரி பயணித்த மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் என்றும் கொட்டாஞ்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நளீம் நிஷார் (வயது 41), கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் தாங்கள் வந்த மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு தப்பிச் செல்ல பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் இரண்டு பாதுகாப்பு தலைக்கவசங்கள், கொட்டாஞ்சேனை மட்டி பூங்கா பகுதியில் இருந்து பொலிஸாரினால் அன்றையதினமே கைப்பற்றப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தொங்கிய நிலையில் மாணவியின் சடலம் மீட்பு

பிங்கிரியவில் உள்ள வடமேற்கு தேசிய கல்வியியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு மாணவி ஒருவரின் சடலம் மின்விசிறியில் தொங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டதாக பிங்கிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெல்தெனிய, வெலிகட்டிய, புதுஹாபுவ பகுதியைச் சேர்ந்த ராஜபக்ஷ உடஹெனேகெதர சஞ்சீவனி குமாரி என்ற 24 வயது இளம் பெண் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி, வடமேற்கு தேசிய கல்வியியல் கல்லூரியில் படித்து வந்ததாகவும், சம்பந்தப்பட்ட படிப்புகளுக்காக வடிவமைக்கப்பட்ட நடைமுறை கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக சிலாபத்தில் உள்ள ஆனந்த தேசிய பாடசாலைக்கு அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அவளுடைய புடவை கழுத்தில் சுற்றப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.







## 5ஆவது நினைவு நாள் அனுஷ்டிப்பு

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 5வது ஆண்டு நினைவு நாள் திங்கட்கிழமை (26) அன்று கொட்டகலை சி.எல்.எப். வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. விசேட பூஜை வழிபாடுகளின் பின்னர். அன்னாரின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இப்பூஜை வழிபாட்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பாரியார் ராஜலஷ்சுமி தொண்டமான், தவிசாளரும், நிதிச்செயலாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் உட்பட இ.தொ.கா உயர்பீட உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.









## ஐஸுடன் இளைஞன் கைது

பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் நடமாடிய இளைஞன் கல்முனை விசேட அதிரடிப் படையினரால் வெள்ளிக்கிழமை (23) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை விசேட அதிரடிப்படை புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 26 வயது மதிக்கத்தக்க 2 பிள்ளைகளின் தந்தையான மருதமுனை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அவரிடமிருந்து 710 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் உட்பட சான்றுப் பொருட்கள் யாவும் சட்ட நடவடிக்கைக்காக பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



மேலும் இந்த கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் காணி சுவீகரிப்பும்; கிழக்கில் முளைத்த புத்தர் சிலையும்

நாமெல்லாம் ஒரு தாய் மக்கள், இங்கு பேதங்கள் இல்லை, எமது ஆட்சியில் எல்லோரும் சமமாக மதிக்கப்படுவார்கள் என புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலர், பாராளுமன்றத்திலும் வெளியிலும் பகிரங்கமாக உரையாற்றுகின்றனர். எனினும், அவ்வாறான அமைச்சர்கள் இருக்கும் அரசாங்கத்தால், வடக்கு, கிழக்கில் கடுமையான பாரபட்சம் காட்டப்படுகிறது.

வடக்கில் 5,940 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கு அதிரடியாக நடவடிக்கை எடுத்துள்ள அரசாங்கம், கிழக்கில் புத்தர் சிலைகள் முளைப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

வைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்ற முடியாது. அகற்றினால், அது வேறு பிரச்சினைகளை தூண்டிவிடும். ஆனால், எங்கெல்லாம் புத்தர் சிலைகளை வைக்கலாம். அல்லது வைக்கக்கூடாது என்பது தொடர்பில் வரையறைகளைக் கொண்டு வர வேண்டும். அது அரசாங்கத்துக்கு இயலாத காரியமாகும்.

சிறுபான்மை இன மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் வேறு மதங்களைச் சேர்ந்த அடையாள சின்னங்களை வைப்பதன் அர்த்தம் என்ன? அதேபோல், பரம்பரையாக தங்களுடைய வழிபாட்டிடங்களை அபகரிக்கும் வகையில், இவ்வாறு புத்தர் சிலைகளை முளைக்க வைப்பது ஏன்? இவை கூட இனங்களுக்கு இடையில் மன கசப்புகளை ஏற்படுத்திவிடக் கூடும்.

அரசியல் வேறு, மதம் வேறு என்பதை அரசியல்வாதிகளும் மக்களும் புரிந்து கொள்ளாத வரையிலும், சிலைகள் முளைக்க வைக்கப்படும். பெரும்பான்மை கட்சிகள் சிலவற்றைப் பொறுத்தவரை, பௌத்தத்தை வைத்து அரசியல் செய்து கொண்டிருக்கின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட, தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதியானால், கண்டி எசல பெரஹர கூட நடைபெறாது என எதிரணியினர் பிரசாரம் செய்தனர்.

ஆனால், கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் வைக்கப்பட்டுள்ள புனித சின்னமான 'தந்ததாது'வை பொதுமக்கள் தரிசிப்பதற்கான வாய்ப்பு 16 வருடங்களின் பின்னர் அளிக்கப்பட்டது. அதனையும் ஒரு சிலர் கடுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தினர். ஆக அரசியலுக்கு மத உணர்வைக் கிளறிவிடாமல், சில பெரும்பான்மை கட்சிகளுக்கு அரசியல் செய்ய முடியாது என்பதே உண்மையாகும்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், வடக்கு, கிழக்கில் பல புத்தர் சிலைகள் முளைக்க வைக்கப்பட்டன. தொல்பொருள் அகழ்வாராய்ச்சி எனும் போர்வையில் தமிழ் பிரதேசங்களில் விகாரைகள் கட்டப்பட்டன. தற்போதும், பகிரங்கமாக புத்தர் சிலைகள் முளைக்க வைக்கப்படுகின்றன.

வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் காணிகள் பலவற்றில் இப்போதும் இராணுவ முகாம்கள் உள்ளன. இராணுவ வசமே பெரும்பாலான காணிகள் உள்ளன. வடக்கு மற்றும் கிழக்கில் பெரும்பகுதிகளில் மக்கள் இப்போதும் அகதிகளாக தனியார் வீடுகளிலும் முகாம்களிலும் வாழ்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மதங்களை வழிபாட்டு உரிமையைத் தடுக்க யாருக்கும் உரிமையில்லை. எனினும், வேறு மதங்களைப் பின்பற்றுவோரின் உரிமையை அபகரிக்கும் வகையில் செயற்படவும் கூடாது. ஆகையால், வடக்கில் காணி விடயத்திலும் கிழக்கில் புத்தர் சிலை விவகாரத்திலும் அரசாங்கம் சிந்தித்துச் செயல்படுவதே உசிதமானது.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்வபர்களேயே சமூகம் விரும்புகின்றது.

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப்போய் விடுவார்கள். நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனோ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

# முஸ்லிம் கட்சிகளின் இணைவு எவ்வாறு அமைய வேண்டும்?

மொஹமட் பாதுஷா

முஸ்லிம் அரசியலில் இயங்கிக் கொண்டிருக்கும் இரு 'காங்கிரஸ்களின்' தலைவர்கள் ஒன்றிணையவுள்ளதாக வெளியான உறுதிப்படுத்தப்படாத செய்தி முஸ்லிம் சமூகத்திற்குள் கடந்த இரு தினங்களாகப் பேசுபொருளாக மாறியுள்ளது.

இந்தப் பின்னணியில், றவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸும் ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸும் அடுத்த மாகாண சபை தேர்தல் வரையும் இணைந்து செயற்படும் என்று பேச்சடிபடுகின்றது.

இந்தச் செய்தி, இந்தளவுக்கு வரவேற்பைப் பெற்றதற்குக் காரணம், முஸ்லிம் மக்கள் முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒற்றுமைப்பட வேண்டும் என்றும் சமூகத்தின் உரிமைகளை, அபிலாஷைகளை வென்றெடுக்கின்ற விடயத்தில் அவர்கள் ஒருமித்துச் செயற்பட வேண்டும் என்றும் நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்தமையினாலாகும்.

ஹக்கீமும் அதாவுல்லாவும் இணைந்தால், இரு தரப்பிற்கும் குறிப்பிட்ட பிரதேசங்களில் அரசியல் நன்மைகள் கிடைக்கும் என்பதையும், றிசாட் தலைமையிலான மக்கள் காங்கிரஸின் ஆதிக்கத்தைக் குறைக்கலாம் என்றும் கருதலாம் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், அரசியலுக்காக அல்லது தேர்தல்களை மையமாகக் கொண்டு அல்லாமல் சமூகத்திற்காக, முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முஸ்லிம் அணிகளிடையே ஒரு மிதமான ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதே மக்களின் உண்மையான எதிர்பார்ப்பாகும். அது நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

ஆனால், தேர்தலுக்கான கூட்டுகள் அல்லது ஆட்சியமைப்பதில் கூட்டுகளே இதுவரை காலமும் சாத்தியமாகி வருகின்றன. ஏனைய காலங்களில் மக்களைப் பிரித்தாளுவதை முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒரு வேலையாகவே செய்து வருகின்றனர். இதனை அண்மையில் ஒரு முஸ்லிம் தலைவர் வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டு இருந்தார்.

தமிழரசுக் கட்சியைத் தவிர்த்துப் பார்த்தால், ஏனைய பல தமிழ்க் கட்சிகள் கடந்த காலங்களில் ஆயுத இயக்கங்களாக அறியப்பட்டன. சில இயக்கங்கள் முஸ்லிம்கள், சிங்கள மக்களுக்கு எதிரான குற்றச் செயல்கள், அநியாயமிழைப்புக்களிலும் ஈடுபட்டன. ஏன் தமிழர்கள் கூட இறுக்கப்பட்ட சம்பவங்கள் உள்ளன.

ஆனால், ஒரு கட்டத்திற்குப் பிறகு இந்தக் கட்சிகள் எல்லாம் தேசிய நீரோட்டத்திற்கு வந்து விட்டன. பல அணிகளை உள்ளடக்கிய பலமான ஒரு அணியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்தது. இப்போது வேறு சில கூட்டணிகளும் உருவாகியுள்ளன.

ஒவ்வொரு தமிழ்க் கட்சிக்கும் வேறு தலைவர்களும் வெவ்வேறு கொள்கைகளும் உள்ளன. பல சந்தர்ப்பங்களில் முரண்படுகின்றன. ஆனால், தமிழ் மக்களின் விவகாரங்களில் ஒருமித்துச் செயற்படுகின்றன. இதுதான் அரசியலாகும்.

தமிழ் மக்கள் தொடர்பான விவகாரங்களை ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு விதமாக அரசியல் களத்தில் பேசினாலும், எல்லாவற்றினதும் இலக்கு ஒன்றாக இருப்பதைக் காண்கின்றோம். அதாவது மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் அவை ஒருமித்துச் செயற்படுகின்றன.

இப்படியான ஒரு ஏற்பாடே முஸ்லிம் அரசியலிலும் தேவைப்படுகின்றது. முஸ்லிம் கட்சிகள், தலைவர்களைப் பாதுகாப்பதற்காக அன்றி சமூகத்தின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான கூட்டுக்களே தேவைப்படுகின்றன.

முஸ்லிம் கட்சிகள் பெரும்பாலும் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் வழியில் உருவானவை. ஆனால், இப்போது அரசியலில் அல்லது உயிருடன் இல்லாத ஓரிரு அரசியல்வாதிகளைத் தவிர மற்ற எல்லோருமே, ஹக்கீம் இக்கட்சியின் தலைவராக வந்த பிறகு முரண்பட்டு; வெளியேறியவர்கள் ஆவர்.

அத்துடன், ஒவ்வொருவரும் மக்களைத் துண்டாடி அவர்களை ஒரு குறிப்பிட்ட அரசியல் கோட்பாட்டின் கீழ் கட்டிப் போட்டுள்ளார்கள். எனவே, இரு தரப்பு அரசியல்வாதிகளும் பரஸ்பரம் நம்புவது என்பது சாத்தியமற்றதாக இருந்து வருகின்றது.

இவ்வாறான பல காரணங்களினாலேயே கடந்த காலங்களில் முஸ்லிம் கூட்டமைப்பை உருவாக்குவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டுக்குலைந்த பிறகு, கூட்டமைப்பு பற்றிய அபிப்பிராயங்களும் மாறி விட்டுள்ளதாகத் தெரிகின்றது.

எது எவ்வாறிருப்பினும், தமிழ் கட்சிகளிடையே இப்போது பலமான ஒரு கூட்டமைப்பு இல்லாவிட்டாலும் அவர்களது காணப்படும் ஒருமைப்பாடு, ஒன்றிணைந்த அழுத்தம் கொடுக்கும் போக்கு, ஒருமித்த சித்தாந்தங்கள் ஒரு பலமான செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன.

இப்படியான ஒரு முயற்சியே முஸ்லிம் சமூகத்திற்குள்ளும் அவசியமாகின்றது. அதுதான் நடைமுறைச் சாத்தியமானதும் கூட.

மு.கா. தலைவர் ஹக்கீமும் தே.கா. தலைவர் அதாவுல்லாவும் சந்தித்துப் பேசியிருக்கின்றார்கள் என்றால், அது நல்ல விடயமே. இதனை யாரும் மறுக்கவியலாது. இருப்பினும், இது இரு கட்சிகளும் இணைவது பற்றிய சந்திப்பல்ல. முதற்கட்டமாக, இரண்டொரு உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது பற்றியதாகவே தெரிகின்றது.

மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ள சூழலில், கிழக்கில் தமிழ்க் கட்சிகள் மற்றும் ஆளும் கட்சியால் ஏற்படுத்தப்படக் கூடிய போட்டிக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைந்த பலத்தை வெளிக்காட்ட வேண்டியுள்ளது.

அந்த வகையில், இது நிச்சயம் ஒரு நல்லுறவுக்கு வழிவகுக்கும். ஒரு நல்ல ஆரம்பமாக அமையலாம். ஆனால், இருவரும் முற்றாக இணைந்து விட்டார்கள் என்பதும், 'இவர்தான்' முதலமைச்சர் வேட்பாளர் என்பதும், இப்போதைக்குக் கற்பனைக் கதை என்றே கூறலாம்.

இரு காங்கிரஸ்களோ அல்லது மூன்று காங்கிரஸ் கட்சிகள் மற்றும் இதர முஸ்லிம் அணிகளோ தமது அடையாளத்தை ஒருபுறம் வைத்து விட்டு, முற்றாக ஒன்றுடன் ஒன்று கலந்து விடுவது நடைமுறைச் சாத்தியமற்றது.

பதவிகள், அந்தஸ்து, அதிகாரம், கௌரவம் என்பவற்றையும் தாண்டி அவரவர் ஏற்கெனவே மக்களிடம் கூறிய கற்பிதங்களே சவாலாக அமைந்து விடும். எனவே, அப்படியொரு அபூர்வம் நடந்தாலும், அது நீண்டகாலத்திற்கு நீடிக்காது.

ஆனால், முஸ்லிம் சமூகத்தின் அரசியல் இலக்குகளை அடைவதற்காக, அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காகப் பல முஸ்லிம் கட்சிகள் ஒரே கூரையின் கீழ் சந்தித்து. ஒருமித்த நிலைப்பாட்டில் முன் செல்வதும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதும் ஒப்பீட்டளவில் நடைமுறைச் சாத்தியமானது.

அதனையே முஸ்லிம் கட்சிகள், அணிகள் செய்ய வேண்டியுள்ளது.

இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கும் அதற்கு வெளியிலுள்ள முஸ்லிம்களுக்கும் வருடக் கணக்காக தீர்க்கப்படாத சிக்கல்கள் உள்ளன.

தமிழ் ஆயுதக் குழுக்களும், இந்திய இராணுவமும் செய்த அநியாயங்கள், வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றம், பள்ளிவாசல் படுகொலைகள், கடத்தல், கப்பம் பெறல், முஸ்லிம் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட உயிர் பறிப்புக்கள், குரக்கள்மடம் ஹாஜிகள் படுகொலை என பல மீறல்களுக்கு நீதி இன்னும் நிலைநாட்டப்படவில்லை.

2010ஆம் ஆண்டுக்கு முன்னரும் அதன் பின்னரும் இனவாதிகளால் முஸ்லிம்களுக்குப் பல வழிகளிலும் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகள், கலவரங்கள், கருத்துருவாக்கங்களுக்கான நீதி எந்த அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை.

மிக முக்கியமாக, முஸ்லிம்களுக்கு இலட்சக்கணக்கான ஏக்கர் தொடர்பான காணிப் பிரச்சினைகள் உள்ளன. சனத்தொகை வீதாசாரத்திற்கு அமையக் காணிகள் இல்லை என்பது ஒருபுறமிருக்க, சொந்தக் காணிகளை உரிமை கொண்டாடுவதற்காகவே பல வருடங்களாக நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் போராடி வருகின்றனர்.

அதேபோன்று, முஸ்லிம் தேசியம், இனப் பிரச்சினை தீர்வில் முஸ்லிம்களுக்கான சமஷ்டி அல்லது மர்ஹூம் அஷ்ரப் தொடர்ந்து வலியுறுத்திய அதிகார அலகு பற்றிக் கடந்த இருபது வருடங்களில் முஸ்லிம் தலைவர்கள் எம்.பி.க்கள் முதல் இப்போது எம்.பிக்களாக இருப்பவர்கள் வரை யாரும் வலியுறுத்தவில்லை.

இந்தப் பின்னணியில், ஏதோ முஸ்லிம்களுக்கு நீண்டகாலப் பிரச்சினைகள் எதுவும் இல்லை என்பது போலவும், நாட்டில் எல்லா மக்களுக்கும் இருக்கும் பிரச்சினைகளைத் தவிர, பிரத்தியேகமான எந்த தேவைப்பாடுகளும் முஸ்லிம்களுக்கு இல்லை என்பது போலவும் ஒரு தோற்றப்பாடு கட்டமைக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தப் போலி விம்பத்தை உடைத்தெறிந்து, முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியலை சரியான வழியில் முன்னெடுப்பதற்கும், முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை, அபிலாஷைகளை ஒருமித்த குரலில் வலியுறுத்துவதற்கும் முஸ்லிம் தலைவர்கள், தளபதிகள் ஒருமித்துச் செயற்பட வேண்டிய காலத்தின் தேவை எழுந்துள்ளது. அப்படியான ஒரு கூட்டே தேவைப்படுகின்றது.

தனிப்பட்ட ரீதியில் கட்சிகள் இலாபம் பெறுவதற்காகவோ தலைவர்கள் தமது கோட்டைகளைக் காப்பாற்றுவதற்காகவோ தேர்தலை மட்டும் இலக்கு வைத்ததாகவோ இந்த இணைவு இருக்கக் கூடாது. மாறாக, முஸ்லிம் சமூகத்தின் பேசப்படாத அபிலாஷைகளை வெள்றெடுப்பதற்கான ஒரு ஒன்றிணைவாக அது அமைவது அவசியம்.

## கடிதங்கள்

### கழிவு சேகரிப்பில் அசமந்தம்


அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வாரத்திற்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட்டுவரும் திண்மக் கழிவு அகற்றும் வேலைத்திட்டம் முறையாக மேற்கொள்ளப்படாமை குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கழிவகற்றும் வாகனங்கள் வராத காரணத்தால், வீதிகளில் வைக்கப்படும் கழிவுகள் கட்டாக்காலி மாடுகளால் சேதப்படுத்தப்பட்டு, வீதியெங்கும் துர்நாற்றம் வீசுவதுடன், பாதசாரிகளுக்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.


மேலும், அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கழிவகற்றும் செயற்பாட்டில் தமிழ், முஸ்லிம் தொழிலாளர்கள் என பாகுபாடு இடம்பெற்று வருவதாகவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

எனவே, எல்லோரும் சமமாகப் பார்க்கப்பட்டு, திண்மக்கழிவுகள் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டை முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஷட்.ஏ.எம்.பைஷல் மற்றும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி ஆகியோரிடம் அட்டாளைச்சேனை பிரதேச பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– அபு அலா



# கல்வி சமூக மயமாக்கலில் பொது நூலகம்



**கேசகன் பிரசாந்,**
4ஆம் வருட கல்வியியல்,
சிறப்புக் கற்கை மாணவன்(B.Ed),
கல்வி–பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

கல்வியின் தலையாய கடமை ஒருவனைச் சிறந்த மனிதனாக்குவதுதான். இதனை மனிதகுலத்திற்கு உணர்த்துவதில் பொது நூலகங்களினுடைய பங்கும் இன்றியமையாததாக அமைகிறது.

மனிதனின் உயர்வுக்கு வழிகாட்டும் வகையில் நூல்களாகிய சாமிகள் உறையும் கோவிலாக, அனைத்துத் தர மக்களையும் அணைத்து நிற்கும் புனித இல்லமாகப் பொதுநூலகங்கள் திகழ்கின்றன. அறிவையும் ஆற்றலையும் அள்ளித்தருகின்ற பல நூறு போதிமரங்களின் கூட்டாய்ப் பொதுநூலகங்கள் காணப்படுகின்றன. இத்தகைய நூலகங்கள் குறித்த கருத்தாளர்களாக சீர்காழி இரா. அரங்கநாதன் (இந்திய நூலகவியலின் தந்தை), விக்டர் ஹியூகோ, Machael Bucland, Richard S.bell, David Lankes போன்றவர்கள் முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்றனர்.

நடராஜா செல்வராஜா (2025), இலங்கையில் நூலகவியல் கல்வி எனும் தலைப்பில் எழுதப்பெற்றதான ஆய்வுக்கட்டுரையில் 1970ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் திகதி உருவாக்கப்பட்ட 17ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டப்படி, இலங்கை தேசிய நூலக சபையின் மூலமாக பல்வேறு வகையான நூலகச் செயற்பாடுகளையும் சமூக பங்குபற்றல்களையும் நூலகத்தின் வாயிலாக இன்றைவரை நடைபெறும்விதம் பற்றியதாக விளக்கிக் கூறியுள்ளார்.

அறிவில் நாட்டம் கொண்ட மாணவ சமூதாயத்திற்கும் கல்வி ஆராய்ச்சியாளர்களுக்கும் சிறந்த பயனுள்ள தகவல்களின் களஞ்சியசாலையாகச் செயற்படுதல், சமூக மாறுதல்களைத் தோற்றுவிக்கும் பல்சமய, பல்கலாசார வேற்றுமை வாதிகளையும் கூட்டுச் சேர்க்கும் களமாகக் காணப்படுதல், பயனுள்ள அறிவுத் தேடலினை ஊக்குவிக்கும் இடமாக அமைதல், சிறந்த ஆக்கபூர்வமான பொழுதுபோக்குத் தளமாக விளங்குதல், வாசகரின் வாசிப்பு அனுபவத்தை மேம்படச் செய்யவும் புத்தாக்க சிந்தனையில் மெருகூட்டவும் என வாழ்க்கைச் சுழற்சியின் அவசியமான அச்சாணியாக பொதுநூலகங்கள் பயன்பட்டு நிற்பதனை யாரும் மறுப்பதற்கில்லை.

இத்தகைய வாய்ப்புக்களை வழங்கும் பொதுநூலகங்கள் சமூக மாறுதலுக்கான பங்களிப்புக்களை எவ்விதம் கொண்டு செயற்படுகின்றது என்பதும் ஆராயப்பட வேண்டிய விடயமாகவே இன்றைய காலச் சூழலில் அமைந்துள்ளது.

பொதுநூலகம் என்பது அனைவருக்கும் பொதுவான ஒரு ஸ்தலம் என்பதனால் அனைத்து சமூக வர்க்கங்களையும் சமமான புரிதலோடு ஏற்று நடப்பதற்கான பங்களிப்பினை நல்குகின்ற தன்மையோடு காணப்படுகிறது, பால் சமத்துவ சிந்தனையினை விதைக்கும் இடமாகவும் விட்டுக்கொடுப்பு மற்றும் புரிந்துணர்வோடு அமைதியின் வழியில் எவ்வாறு ஒரு இணக்கத்தினையும் இடர்பாடற்ற பயன் நிலையினையும் உருவாக்க முடிகின்றது என்பதனை சமூகத்திற்கு கற்றுக்கொடுக்கின்ற ஓர் இடமாகவும் நூலகம் அமைந்திருக்கின்றது. அத்தகைய சமூக மாறுதலின் மூலமாக சமூகமயமாக்கலிற்கான அடித்தளத்தினை உண்டுபண்ணுகின்ற உயர் சக்தியாக பொதுநூலகம் செயற்படுவதனையும் பங்களிப்பு செய்வதனையும் யாம் அறிய முடிகிறது. மேலும் பலதரப்பட்ட மொழிகளின் சேர்க்கையாகவூம் தகவல் வழங்கும் ஸ்தாபனமாகவும் பொதுநூலகம் அமைந்திருப்பதனால் பல்வகைமைத் தன்மையினை ஊக்குவித்து சமூகமாற்றத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற முறைமை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

சமூக மட்டத்தில் சமூகமயமாக்கல் சிந்தனையில் மாற்றத்தினையும் புரிதலினையும் உண்டாக்கத் தேவைப்பாடு கொண்ட ஓர் அமைப்பாகவும் இந்த பொது நூலகங்கள் அமைந்திருப்பதும் ஏற்றுக் கொள்ள கூடியதாகவே அமைகின்றது. அத்துடன், கல்வியறிவையும் அனுபவத்தினையும் விரிவாக்க வேண்டிய தேவை அனைத்து தரப்பினருக்கும் அவசியமான அம்சமாகும். கல்வி கற்ற சமுதாயத்தின் உருவாக்கத்தின் மூலமாகவே நாட்டின் வளர்ச்சியினையும் அபிவிருத்தியினையும் திட்டமிட முடியும். அதற்குரிய சூழலை வழங்குவதில் நூலகங்கள் தேவைப்பாடு கொண்டவையாகவே அமைந்திருக்கின்றன. சமூக மாற்றத்திற்கான நூலகம் அறிவு, கல்வி, சமூக ஒற்றுமை, பாலின சமத்துவம், தொழில்நுட்ப தகவல் அறிவு போன்ற பலவகையான அம்சங்களினை சமூகத்தினில் பரவலாக்கிட தேவைபாடு கொண்டவகைமையில் உள்ளதனை ஏற்றுக்கொள்வது அவசியமாகும்.

இன்றைய காலச் சூழ்நிலையில் பொது நூலகங்களினுடைய செல்வாக்கானது வலுக்குன்றியதான தன்மையில் காணப்பட்டாலும், கல்விச் சமூக மயமாக்கலிலும் சமூக மற்ற சிந்தனையிலும் நூலகங்களினுடைய தேவையானது அவசியமான ஒன்றாகவே காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, நூலகங்களில் பொது நூல் வெளியீடுகளின் போது, சமூக மட்டத்தின் சகல தரப்பினருக்கும் திறமை அடிப்படையிலான வாய்ப்புகளைப் பகிர்ந்தளிக்கின்ற தன்மையினைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மேலும், பாடசாலை மாணவர்களுக்கு ஊக்குவிப்பினை ஏற்படுத்தும் வகைமையில் எழுத்தறிவுப் பயிற்சி வழங்குதல், தமிழ் வினாவிடைப் போட்டிகள், வாசிப்பு மாத சிறப்புப் போட்டிகள், பொங்கல் விழா நிகழ்வுகள், சான்றோர்களின் நினைவு விழாக்கள், கலை ஒன்று கூடல்கள், தொழில் முனைவோருக்கான உதவிகள், இளைஞர் கருத்தரங்குகள், தொழில் வழிகாட்டல் செயலமர்வுகள் போன்ற பலவகையான அம்சங்களை ஊக்குவித்து அவற்றின் மூலமாக சமூகப் பங்குபற்றுதல்களையும் வாய்ப்பு நிலைமைகளையும் அறிவார்ந்த சமுதாயத்திற்கு ஏற்படுத்திக் கொடுக்கின்ற செயற்பாடுகளைத் தற்காலத்தில் பொது நூலகங்கள் செயற்படுத்துவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

யாழ். நூலகத்தினால் *Symposium on Library and information Science*-2024 ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பில் சமூக பங்குபற்றல்களிலும் சமூக மயமாக்கல் செயற்பாடுகளிலும் நூலகங்களுடைய செயற்பாட்டு அம்சங்களைப் பற்றிய விளக்கங்கள் தொகுத்துக் கூறப்படுகின்ற தன்மையினையும் அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக ம.பிரகாஷ் அவர்களுடைய "இலக்கியச் செயற்பாட்டினூடாக சமூகப் பிணைப்பினை ஏற்படுத்திவரும் நிலாமுற்ற நிகழ்வு" எனும் தலைப்பில் அமைந்த கட்டுரையானது பேத்தாழை நூலகம் நிலாமுற்றம் எனும் பௌர்ணமி நிகழ்வினை தொடர்ச்சியாக நடத்துவதனையும் அதன் மூலமாக பல்வேறு இலக்கிய ஆர்வலர்களும் ஒன்றுகூடி சமூகப் பிரச்சினைகளையும் கருத்தாக்கங்களையும் கொண்ட இலக்கியவாதிகளின் படைப்புக்களை அறிமுகம் செய்து அவற்றினை சமூக ஊடகங்களிலும் வலைத்தளங்களிலும் மக்கள் பார்வைக்காக ஒன்றிப்பது குறித்த தகவல் பகிரப்பட்டு சமூகப் பிணைப்புக்கான செயற்பாடுகளை நூலகம் முன்னெடுப்பது குறித்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இன்றைய நூலகங்களினால் வாசகர்களுக்கு வேண்டியதான சகல அம்சங்களையும் தொழில்நுட்ப வசதி அம்சங்களுடன் நிறைவேற்றிக் கொடுக்கின்றதான செயற்பாடுகளையும் அதிகம் காணமுடிகின்றது. இதன் மூலம் பயனர் நட்புறவு பேணப்படுவதுடன், சமூகக் கலைநிகழ்வுகளை ஊக்குவித்து அதன் மூலமாகவும் சமூகப் பங்குபற்றல்களை வளர்க்கின்ற செயற்பாடுகளையும் பொதுநூலகங்கள் செய்துவருவதனை அறிய முடிகின்றது.

பொதுநூலகங்களின் பாவனைகள் இன்றைய காலகட்டத்தில் மிகவும் குறைந்து வருகின்ற ஒரு செயற்பாடாகக் காணப்படுகின்றது. அதற்கான மிக முக்கியமான காரணம் தகவல் தொழில்நுட்ப செல்வாக்கினுடைய வளர்ச்சியும் வருங்கால இளைய தலைமுறையினருக்கிடையில் வாசிப்பு அனுபவம் ஊக்குவிக்கப்படாத நிலையில் காணப்படுவதுமே ஆகும். இதனை மாற்றியமைக்க நூலகங்களினுடைய உள்ளீர்ப்பினைக் குறித்த விழிப்புணர்வினை சமூக மட்டங்கள் அறிந்துகொள்வதும் அதனை ஊக்குவித்துச் செயற்படுத்துவதும் முக்கிய காரணியாக அமையும்.

கல்விச் சமூக மயமாக்கலைத் தோற்றுவிக்கவும் இலவச அறிவினையும் நல்லொழுக்க சிந்தனையினைப் பெறுதலும் சமூக அங்கீகாரத்தினையும் சமூக ஒற்றுமையினை வளர்த்தெடுப்பதனையும் சமூக உதவிகளை மேம்படுத்துவதனையும் தகவல் களஞ்சியத்தினை பன்முகப்படுத்துதலை வளர்க்கவும் சமூக முன்னேற்றப் பாதையினை வடிவமைக்கவும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் மனித சமுதாயத்தின் வெற்றிகள், இலட்சியச் சிந்தனைகள் போன்றவற்றினை சமூக மாறுதல்களாக உருவாக்கப் பொதுநூலகங்களின் செல்வாக்கு இன்றியமையாதவையாகின்றது.


எனவே கல்விச் சமூக மயமாக்கலும் பொதுநூலகங்களும் என்கின்ற பரப்பானது நூலகங்களின் பயன்பாட்டு அம்சங்களையும் சமூக மாற்றத்திற்கான பங்களிப்புகளையும் பொதுநூலகங்களின் தேவைப்பாடுகள் குறித்த அம்சங்களையும் தற்காலத்தில் பொது நூலகங்களினுடைய செயற்பாடுகளானது எவ்விதம் அமைந்திருக்கிறது, பொதுநூலகங்களால் எவ்வித சமூக மாறுதல்கள் தோற்றுவிக்கப்படும் என்பது குறித்ததான கண்ணோட்டத்தினை வழங்குவதாகவும் சமூக மாற்றத்திற்கானதும் சமூக மயமாக்கலினதும் திறவுகோலாய் பொதுநூலகங்களின் தாக்கங்கள் உள்ளன என்பதனையும் எமக்கு நன்கு தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. அதனை உணர்ந்து பொதுநூலகப் பயன்பாட்டினை ஊக்குவிப்பது கல்விச் சமூகத்தவராகிய எம் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.



# அல்லு அர்ஜுன் படத்தில் 5 ஹீரோயின்களா?

அல்லு அர்ஜுன் நடிப்பில் அட்லி இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படத்தின் பட்ஜெட் மட்டும் சுமார் 700 கோடி ரூபாய் என்றும் இதில் அல்லு அர்ஜுன் சம்பளம் 300 கோடி ரூபாய் என்றும் கூறப்படுகிறது. இந்த படம் ஒரு டைம் டிராவல் கதையை அம்சமாகக் கொண்டது என்றும் இதற்காக அமெரிக்காவில் விஷுவல் காட்சிகள் உருவாக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், இந்த படத்தில் தீபிகா படுகோன், ஜான்வி கபூர் மற்றும் மிருணாள் தாக்கூர் என மூன்று நாயகிகள் நடிக்க இருப்பதாகக் கடந்த சில நாட்களுக்கு முன் செய்தி வெளியானது. தற்போது கூடுதலாக, 'கிங்டம்' திரைப்படத்தில் நடித்த பாக்யஸ்ரீ இந்த படத்தில் நடிக்க இருப்பதாகவும், அதற்கு மேல் ஒரு ஹொலிவூட் நடிகையும் இதில் நடிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த படத்தின் படப்பிடிப்பு இந்த ஆண்டு இறுதியில் தொடங்கும் என்றும், அடுத்த ஆண்டு இந்த படத்தை வெளியிடத் திட்டமிடப்பட்டு உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



# கவர்ச்சியால் கலங்கிய நடிகை

பொலிவூட் சினிமாவில் முன்னணி நடிகை பூமி பட்னேகர், 'தும் லகா கே ஹைஷா' திரைப்படத்தின் மூலம் அறிமுகமானதுடன், கவர்ச்சியான நடிப்பால் ரசிகர்களை ஈர்த்துள்ளார்.

இந்த நிலையில், கவர்ச்சியாக நடிப்பது பற்றி பூமி பட்னேகர் பேசியுள்ள விடயம் இணையத்தில் வைரலாகி வருகிறது. "நடிகைகள் அவ்வளவு எளிதில் கவர்ச்சி காட்சிகளில் நடிக்க மாட்டார்கள். அதைச் செய்யும் நடிகைகளைக் கொண்டாட வேண்டாம், விமர்சிக்காமல் இருந்தால் போதும்.

நடிகை என்றால் அப்படி நடித்துத்தான் ஆக வேண்டும் என்று பேசுவதுதான் வேதனை. கவர்ச்சி காட்டும் பெண்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளும் மனப்பக்குவம் அனைவருக்கும் வரவேண்டும். அப்போதுதான் நடிகைகளுக்கும் உரிய அங்கீகாரம் கிடைக்கும்" என்றார்.

# ஓடிடியில் வெளியாகும் ரெட்ரோ

நடிகர் சூர்யாவின் நடிப்பில் கார்த்திக் சுப்பராஜ் இயக்கிய ரெட்ரோ படத்தில் பூஜா ஹெக்டே கதாநாயகியாக நடித்தார். திரைப்படம் கடந்த மே 1 ஆம் திகதி வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றது.

சூர்யாவின் 2டி மற்றும் கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன் பெஞ்ச் நிறுவனங்கள் இணைந்து தயாரித்த இந்தப் படத்துக்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருந்தார். சூர்யா நடித்த திரைப்படங்களில் மிகப்பெரிய ஓப்பனிங் கிடைத்த திரைப்படமாக ரெட்ரோ மாறியுள்ளதுடன், இதுவரை உலக அளவில் ரூ.235 கோடி வசூலில் கடந்துள்ளது. இந்தநிலையில், திரைப்படம் எதிர்வரும் 31ஆம் திகதி நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாகவுள்ளதாகப் படக்குழு அறிவித்துள்ளது.





# பரமசிவன் பாத்திமா ரிலீஸ் திகதி அறிவிப்பு

நடிகர் விமல் நடித்துள்ள 'பரமசிவன் பாத்திமா' படத்தை இசக்கி கர்வண்ணன் இயக்கியுள்ளார். இவர் இதற்கு முன் குடிமகன், பெட்டிக்கடை ஆகிய திரைப்படங்களை அவர் இயக்கியுள்ளார்.

மலைக் கிராமம் ஒன்றில் எடுக்கப்பட்ட இத் திரைப்படத்தில், இரு வேறு மதத்தைச் சேர்ந்த விமல் மற்றும் சாயாதேவி காதலிக்கின்றனர்.

இவர்களின் காதலால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி கதைக்களம் அமைந்துள்ளது. படத்தின் டிரெய்லர் அண்மையில் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. விமலுக்கு ஜோடியாக சாயாதேவி நடித்துள்ளார். இவர்களுடன் எம்.எஸ் பாஸ்கர்,

ஸ்ரீ ரஞ்சனி, அதிரா, அருள்தாஸ், கூல் சுரேஷ், காதல் சுகுமார் மற்றும் பலர் நடித்துள்ளனர். தீபன் சக்கரவர்த்தி இசையமைத்துள்ளார். திரைப்படம் வரும் ஜூன் 5ஆம் திகதி வெளியாகிறது.

# இறுதி அஞ்சலி...

மறைந்த நடிகை மாலினி பொன்சேகாவின் இறுதிச் சடங்கு திங்கட்கிழமை (26) மாலை சுதந்திர சதுக்கத்தில் அரச மரியாதையுடன் நடைபெற்றது. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தரங்கனி மண்டபத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த மாலினி பொன்சேகாவின் பூதவுடல், சுதந்திர சதுக்கத்தில் திங்கட்கிழமை (26) மாலை அக்கினியுடன் சங்கமமாகியது.

'இலங்கை சினிமாவின் ராணி' என்று அழைக்கப்படும் மாலினி பொன்சேகா சனிக்கிழமை (24) காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 78 ஆகும். மாலினி பொன்சேகாவின் பூதவுடலுக்கு, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் தங்களுடைய இறுதி அஞ்சலி செலுத்தினர். திரைப்பட பிரபலங்கள் உட்பட பலரும் அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.











## திருக்கோவில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

ஆலையடிவேம்பு பிரதேசத்தில், செயலமர்வொன்றை அறிவிப்பதற்காக மாணவி ஒருவரின் வீட்டுக்குச் சென்ற அதிபர் மற்றும் ஆசிரியர் மீது மாணவியின் சகோதரியின் காதலன் வாள் வெட்டு தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்தைக் கண்டித்து திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு முன்பாக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் திங்கட்கிழமை (26) அன்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருக்கோவில் கல்வி வலயத்தின் கீழ் உள்ள ஆலையடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலயம் அதிபர் மற்றும் ஆசிரியர் இருவர், க.பொ.த.சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சனிக்கிழமையன்று தம்பட்டை பிரதேசத்தில் இடம்பெறவிருந்த செயலமர்வு தொடர்பாக அறிவிப்பதற்காக மாணவி ஒருவரின் வீட்டிற்கு வெள்ளிக்கிழமை (23) சென்றிருந்தனர்.

இதன்போது அங்கு மதுபோதையிலிருந்த மாணவியின் சகோதரியின் காதலன், குறித்த ஆசிரியர் மற்றும் அதிபர் மீது வாள் வெட்டு தாக்குதல் மேற்கொண்டு அவர்களின் இரு மோட்டார் சைக்கிள்களையும் அடித்து உடைத்துள்ளார்.

இதில் படுகாயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தைக் கண்டித்து திருக்கோவில் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தம்பிலுவில் மகாவித்தியாலயத்தின் முன்னால் ஒன்று திரண்டு சுலோகங்கள் ஏந்தியவாறு திருக்கோவில் மணிக் கூட்டுக் கோபுரம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு சுமார் அரை மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு தமது கண்டனத்தைத் தெரிவித்த பின்னர் ஆர்பாட்டகாரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

- கனகராசா சரவணன்







ஆக்ரா

தாஜ்மஹாலுக்கு

# பலத்த பாதுகாப்பு

தாஜ்மஹாலுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதை அடுத்து, மத்திய அரசு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.



வான்வெளியில் ஏற்படும் ஆபத்துகளைத் திறம்பட சமாளிக்க அதிநவீன டிரோன் எதிர்ப்பு அமைப்பு நிறுவப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏ.சி.பி. சையத் அரிப் அகமது கூறுகையில், தாஜ்மஹால் வளாகத்தில் டிரோன் எதிர்ப்பு அமைப்பு நிறுவப்படும், இது 7 முதல் 8 கிலோமீட்டர் வரம்பிற்குள் செயற்படும்.

இந்த அமைப்பு தற்போது பிரதான கோபுரத்திலிருந்து 200 மீட்டர் வரம்பிற்குள் திறம்பட இயங்கும் என்றும், ஏதேனும் டிரோன் இந்தப் பகுதிக்குள் நுழைந்தால், அது அதன் சிக்னல்களைக் கண்டறிந்து தானாகவே அதை ஜாம் செய்து, அதைச் செயல்படாமல் செய்துவிடும் என்றும் அவர் விளக்கினார்.

இந்த டிரோன் எதிர்ப்பு அமைப்பின் செயற்பாடு குறித்து பொலிஸாருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் ஒரு சிறப்புக் குழு அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் அதிகம் பார்வையிடப்படும் சுற்றுலாத் தலங்களில் தாஜ்மஹாலும் ஒன்றாகும். இங்குப் பாதுகாப்பு தற்போது மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை (CISF) மற்றும் உ.பி. பொலிஸாரால் கண்காணிக்கப்படுகிறது.

இந்த நிலையில்தான் அதிநவீன டிரோன் நியூட்ரலைசேஷன் அமைப்பை நிறுவ அதிகாரிகள் முடிவு செய்து, அதற்கான தகுந்த ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

ஜார்கண்ட்

ராகுல் காந்திக்கு

# பிணை இல்லாத பிடியாணை உத்தரவு

ராகுல் காந்தியை, திங்கட்கிழமை (26), நேரில் ஆஜராக வேண்டும் என்று பிணையில் வெளிவர முடியாத பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



ஜார்கண்ட் மாநிலம், சாய்பாசாவில், 2018ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி கூட்டத்தில் பேசிய ராகுல்காந்தி, அப்போதைய பா.ஜனதா தலைவர் அமித்ஷா பற்றி கடுமையாக விமர்சனம் செய்தார்.

இது தொடர்பாக அவதூறு வழக்குத் தொடுக்கப்பட்டது. அங்குள்ள எம்.பி., எம்.எல்.ஏக்களுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் இது பற்றிய வழக்கு விசாரணை நடந்து வருகிறது.

இதில் நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கக் கோரி, ராகுல்காந்தி தரப்பில் ஜார்கண்ட் உச்சநீதிமன்றத்தில் முறையிட்டனர். அவர்கள் பிடியாணை பல மாதங்கள் நிறுத்தி வைத்து இருந்தனர்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம், ராகுல்காந்தியின் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்ததால், கீழ் நீதிமன்றத்தில் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

மீண்டும் நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க ராகுல்காந்தியின் சட்டத்தரணி முறையிட்டார். அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இந்த நிலையில் ராகுல்காந்தி திங்கட்கிழமை (26) நேரில் ஆஜராக வேண்டும் என்று பிணையில் வெளிவர முடியாத பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது.

இதுபோன்ற மற்றொரு அவதூறு வழக்கு சுல்தான்பூர் நீதிமன்றத்திலும் நடந்து வருகிறது. கடந்த ஜூலை மாதம், அந்த நீதிமன்றத்தில் ராகுல்காந்தி நேரில் ஆஜரானமை குறிப்பிடத்தக்கது.

உத்தரப்பிரதேசம்

வாராணசியில்

# மந்திரங்கள் மூலம் சிகிச்சை

உத்தரப்பிரதேசம் - வாராணசியில் மந்திரங்கள் மூலமாகச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. முதல்முறையாக மே 25இல் தொடங்கிய இந்த முகாமுக்கு முதல் நாளில் 42 நோயாளிகள் வந்திருந்தனர்.

மந்திரங்களின் சக்தியை மக்களிடம் பரப்புவதற்காகக் காசி எனும் வாராணசியில் முதன்முறையாக மந்திர சிகிச்சை தொடங்கப்பட்டுள்ளது.

21 நாள் மந்திர சிகிச்சை முகாமில், நோயாளிகளுக்கு 3,000 மந்திரங்கள் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகின்றன.

அன்றாடம் தினசரி 3 மணி நேரம் 14 நிமிடங்களுக்கு இந்த சிகிச்சை நடைபெறுகிறது. முகாமில் உள்ள மந்திர நிபுணர்கள் நோயாளிகளின் நோய்க்கு ஏற்ப மந்திரங்களை ஓதி சிகிச்சை அளிக்கின்றனர்.

காலை 1.30 மணி நேரமும் மாலை 1.30 மணி நேரமும் தியானம், யோகா மற்றும் பிராணாய நாமத்துடன் மந்திர சிகிச்சை தொடங்கப்பட்டது. இந்த முகாமில் சிகிச்சை பெற முதல் நாளில் 42 நோயாளிகள் வந்தனர்.

இந்த முகாமை, வாராணசியின் ஷுத்திபூரிலுள்ள ரிஷிவ வேத ஆராய்ச்சி, யோகா மற்றும் இயற்கை மருத்துவ மையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த முகாமில் ஜைன மந்திரங்களும் ஓதி சிகிச்சைகள் குணப்படுத்தப்பட உள்ளன.

பாகிஸ்தான்

பாகிஸ்தானில் அனர்த்தம்

# 20 பேர் பலி; 150 பேர் காயம்

பாகிஸ்தானில், இடி-மின்னலுடன் அடைமழை பெய்து வரும் நிலையில், இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர்.



பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் கடந்த சில நாட்களாக அடைமழை பெய்து வருகிறது. இதனை தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை (25) அங்கு இடி-மின்னலுடன் அடைமழை பெய்த்து . மேலும் பலத்த சூறவாளி காற்றுடன் பெய்த அடைமழை காரணமாக மாகாணத்தில் அமைந்துள்ள நாட்டின் தலைநகரான இஸ்லாமாபாத்தில் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

மேலும் அங்குள்ள லாகூர், ஷேகுபுரா, நங்கனா சாஹிப், அட்டாக், முல்தான், ராஜன்பூர், ஹபிசாபாத், மியான்வாலி, ஜாங் குஜ்ரன்வாலா, லாயா உள்ளிட்ட நகரங்களில் அடைமழை காரணமாக வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

சூரைக்காற்று காரணமாக வீட்டின் மேற்கூரைகள், மின்சார கம்பங்கள், மரங்கள் ஆகியவை வேரோடு சாய்ந்து தூக்கி வீசப்பட்டன. இதனால் அங்கு மின்சார விநியோகம் தடைபட்டது.

மேலும் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் நீரில் மூழ்கின.

பாகிஸ்தானில் ஞாயிற்றுக்கிழமை (25) பெய்த அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, ராட்சர விளம்பர பலகைகள் விழுந்தது உள்ளிட்டவற்றால் பெண்கள், சிறுமிகள் உட்பட 20 பேர் உயிரிழந்தனர். 150க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தநிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பி.எஸ்.எல்: குசல் பெரேராவின் துணையோடு

# சம்பியனான லாகூர் குவாலான்டர்ஸ்



பாகிஸ்தான் சுப்பர் லீக் (பி.எஸ்.எல்) தொடரில் லாகூர் குவாலான்டர்ஸ் சம்பியனானது.

லாகூரில் ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்ற குவாட்டா கிளாடியேட்டர்ஸுடனான இறுதிப் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே குவாலான்டர்ஸ் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளாடியேட்டர்ஸ், ஹஸன் நவாஸின் 76 (43), அவிஷ்க பெர்ணாண்டோவின் 29 (22), பாஹீம் அஷ்ரப்பின் 28 (08), றைலி றொஸோவின் 22 (11), தினேஷ் சந்திமாலின் 22 (13) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் அணித்தலைவர் ஷகீன் ஷா அஃப்ரிடி 4-0-24-3 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 202 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய குவாலன்டர்ஸ், குசல் பெரேராவின் ஆட்டமிழக்காத 62 (31), மொஹமட் நயீமின் 46 (27), அப்துல்லாஹ் ஷஃபிக்கின் 41 (28), சிகண்டர் ராசாவின் ஆட்டமிழக்காத 22 (07) ஓட்டங்களோடு 19.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் அப்ரார் அஹ்மட் 4-0-27-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.


இப்போட்டியின் நாயகனாக குசல் பெரேராவும், தொடரின் நாயகனாக ஹஸன் நவாஸும் தெரிவாகினர்.

மூன்றாண்டு ஒப்பந்தத்தில்

# முகாமையாளராக அலோன்ஸோவை நியமித்த மட்ரிட்

மூன்றாண்டு ஒப்பந்தமொன்றில் தமது முன்னாள் மத்தியகளவீரரான ஸ்கெபி அலோன்ஸோவை முகாமையாளராக ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் நியமித்துள்ளது.

நடப்பு பருவகால முடிவில் தனது ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயெர் லெவர்குசன் முகாமையாளர் பதவியிலிருந்து விலகுவதாக முன்னதாக அலோன்ஸோ அறிவித்திருந்தார்.







காரைதீவு பிரதேச செயலக பூப்பந்தாட்டம்:

# காரைதீவு விளையாட்டு கழகம் வெற்றி

■ வி.ரி.சகாதேவராஜா

காரைதீவு பிரதேச செயலக மட்ட பூப்பந்தாட்டத்தின் ஆண், பெண் பிரிவுகளில் சம்பியனாகிய காரைதீவு விளையாட்டுக் கழகம் வெற்றிவாகை சூடியது.

நிந்தவூர் எம்.ஏ.சி. விளையாட்டு பூங்காவில் வெள்ளிக்கிழமை(23) நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் காரைதீவு பூப்பந்தாட்ட விளையாட்டுக் கழகத்தை வென்றே காரைதீவு விளையாட்டுக் கழகம் சம்பியனாகியிருந்தது.

ஐ.பி.எல்:

# கொல்கத்தாவைத் தோற்கடித்த சண்றைசர்ஸ்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), டெல்லியில் ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்ற கொல்கத்தா நைட் றைடர்ஸுடனான போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத் வென்றது.

ஸ்கோர் விவரம்: நாணயச் சுழற்சி: சண்றைசர்ஸ்ச ண்றைசர்ஸ்: 278/3 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஹெய்ன்றிச் கிளாசென் ஆ.இ 105 (39), ட்ரெவிஸ் ஹெட் 76 (40), அபிஷேக் ஷர்மா 32 (16), இஷன் கிஷன் 29 (20), அனிகெட் ஷர்மா ஆ.இ 12 (06) ஓட்டங்கள்)

கொல்கத்தா: 168/10 (18.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: மனிஷ் பாண்டே 37 (23), ஹர்ஷித் ரானா 34 (21), சுனில் நரைன் 31 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜெய்தேவ் உனத்கட் 3/24 [4], எஷான் மலிங்க 3/31 [3.4], ஹர்ஷ் டுபே 3/34 [4], நிதிஷ் குமார் ரெட்டி 0/6 [1])

போட்டியின் நாயகன்: ஹெய்ன்றிச் கிளாசென்.

# காராத்தேயில் பிரகாசித்த எம்.எ:ப். ஸைனப்

■ நூருல் ஹுதா உமர்

சர்வதேச தற்காப்புக் கலை சங்க இலங்கை கிளையால் நடத்தப்பட்ட மூன்றாவது திறந்த சர்வதேச கராத்தே சாம்பியன்ஷிப்பில் தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் (புவியியல் துறை விசேட) மூன்றாம் ஆண்டு மாணவியான எம். எஃப். ஸைனப், சிரேஷ்ட காட்டா பெண்களின் முதலாம் பிரிவில் முதலாமிடத்தையும், சிரேஷ்ட குமித்தே பெண்கள் பிரிவில் இரண்டாமிடத்தையும் பெற்றார்.



தென்கிழக்கு கிழக்கு பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் சனிக்கிழமை (24) இப்போட்டிகள் நடைபெற்றன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 27 ஜூலை 2025, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.